காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அ.தி.மு.கவின் 49 ஆவது ஆண்டுவிழாவை கொடியேற்றி ஆரம்பித்துவைத்தார் முதல்வர்!





அ.தி.மு.க.வின் 49 ஆவது ஆண்டு தொடக்க விழாவை முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி கட்சி கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத் துள்ளார்.

முதலமைச்சர் தனது சொந்த ஊரான சேலம் - சிலுவம்பாளையத்தில் கட்சி கொடியை ஏற் றியுள்ளார்.

சேலம் - சிலுவம்பாளையம் பஸ் நிலையம் அருகே முன்னாள் முதலமைச்சர்களான எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் படங்களுக்கு மலர் தூவிஇ மரியாதை செலுத் திய பின்னர் கட்சி கொடியேற்றியுள்ளார்.

## 75 ரூபா நாணயம் மோடியால் வெளியீடு!



உணவு மற்றும் வேளாண் அமைப்பின் 75 ஆவது ஆண்டை குறிக்கும் வகையில் 75 ரூபா நாணயத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள் ளார்.

உணவு மற்றும் வேளாண் அமைப்பான எப்.ஏ.ஓ. – வின் 75 ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையிலும் இந்தியாவுக்கும்இ இந்த அமைப்புக்கும் உள்ள நீண்டகால தொடர்பைக் குறிக்கும் வகையிலும் இந்த நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் உலக உணவு தினத்தை முன்னிட்டு அண்மையில் உருவாக்கப்பட்ட உயிரி செறிவூட்டிய 8 பயிர்களின் 17 ரகங்களையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்த நிகழ்வின்போது பேசிய பிரதமர் மோடி –

உலக உணவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவது ஒரு பெரிய சாதனை என்றும், இதில் நமது பங்களிப் பும் அதனுடன் இணைந்தது வரலாற்று சிறப்புமிக் கது என்பதில் இந்தியா மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தலைவர் தொடர்பான ஆலோசனை ஆரம்பம்!

காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவரைத் தெரிவுசெய்ய அமைக்கப்பட்ட மத்திய தேர்தல் குழு தனது பணியை ஆரம்பித்துள்ளது.

காங்கிரஸ் கட்சிக்குள் அமைப்பு ரீதியான தேர்தல் களை நடத்துவது தொடர்பாக அந்தக் கட்சியின் மத்தி ய தேர்தல் ஆணையகம் கூடி ஆலோசித்துள்ளதுடன் பணிகள் ஆரம்பிப்பதற்கான முடிவை எடுத்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் தேர்தல் குழுவின் தலைவர் மதுசூதன் மிஸ்திரி தலைமையில் இந்தக் கூட்டம் நடந்துள்ளது.

இந்நிலையில், திட்டமிட்டபடி அனைத்துப் பணி களும் முறையாக நடந்தால், 2021ஆம் ஆண்டு தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவர் பதவியேற்பார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று ராகுல் காந்தி தலைவர் பொறுப்பை ராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து இடைக்காலத் தலைவராக சோனியா காந்தியை கட்சியின் செயற்குழு நியமித்தது. ஆனால், ஓராண்டா கியும் புதிய தலைவர் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாராஷ்டிராவில் கனமழை 48 பேர் பலியாகினார்கள்!



மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 3 நாள்களாக தொடர்ச்சியாக பெய்யும் கனமழை மற்றும் வெள்ளத்தால் 48 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

அந்த மாநிலத்தின் புனே, சோலாப்பூர், சாங்லி, சதாரா, கோலாப்பூர் ஆகிய மாவட்டங்கள் கனமழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், பல ஊர்களில் வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் புனே, அவுரங்கபாத் மற்றும் கொங்கன் மாவட்டங்களில் மட்டும் மழை வெள்ளத்தால் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ் சம் புகுந்துள்ளனர். ஒரு லட்சம் ஹெக்டேயருக்கும் அதி கமான பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்துள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் சீனாவால் ஏற்படுத்தப்பட்டு விட்டது!

### ஜெய்சங்கர் குற்றச்சாட்டு

சீனா தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதென வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் கெவின் ருத்துடன் நடத்திய காணொலி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

இந்த விடயம் தொடர்பாக மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

லடாக் அசல் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே சீனா தனது படைகளை ஆயுதங்களுடன் குவித்திருக்கின்றமை பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள் ளது.



மேலும் இந் தப் பிரச்சினை அரசியல் ரீதி யானமிகப்பெரிய சவாலை ஏற்ப டுத்தியிருக்கின் றது. சீனாவின் தரப்பில் இருந்து நியாயமான ஒரு விளக்கத்தையும் நாம் பெற வில்லை.

இதேவேளை தீவிரவாத நடவடிக்கைகளைக் கைவிடாத பாகிஸ்தானுடன் பேச்சுக்கு இடமில்லை. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் குலாம் நபி ஆசாத்துக்குக் கொரோனா!



காங்கிரஸின் மூத்த தலைவரும் மாநிலங்களவை எதிர்க் கட்சித் தலைவருமான குலாம் நபி ஆசாத் துக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட் டுள்ளது.

இந்நிலையில்இ 71 வயதான குலாம் நபி ஆசாத், தற்போதுதான் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ருவிற்றர் பக்கத்தில் கூறுகை யில் –

எனக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், நான் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டேன். என்னுடன் கடந்த சில நாள்களாகத் தொடர்பில் இருந்தோர், தயவுசெய்து தனிமைப்படுத் திக் கொண்டு கொரோனா பரிசோதனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், கொரோனாவில் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்இ சட்ட மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு மீண்டனர்.

## லடாக் தீர்வு விடயத்தில் இந்தியாவிற்கு எதிரான தலைகீழ் நிலைப்பாட்டில் சீனா



லடாக் எல்லைப் பிரச்சினை யைத் தீர்க்கும் விவகாரத்தில், இந் தியா முன்வைக்கும் நிலைப்பாட் டிற்கு, தலைகீழான நிலைப்பாட்டை சீனா முன்வைப்பதாக தகவல் வெளி யாகியுள்ளது.

லடாக் போர்ப்பதற்றத்தை முடிவுக் குக் கொண்டுவர நடைபெறும் பேச்சுகளின்போது, இந்தியா சார்பில், முதலில், படைகளை விலக்கிக் கொள்வது என்றும், இதையடுத்து, போர்ப்பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

மேலும், கடந்த ஏப்ரல் மாதத் தில் இருந்த நிலையையே, இருதரப் பும் தொடர வேண்டும் எனவும் இந் தியா சுட்டிக்காட்டுகிறது.

ஆனால், இந்தியாவின் நிலைப் பாட்டிற்கு நேர் எதிராக அதாவது, முதலில், போர்ப்பதற்றத்தை தணிக்க வேண்டும் என்றும், அதன் பிறகு, படைகளை திரும்ப பெறுவது குறித்தும் பேச லாம் என சீனா கூறுவதாக, தகவல் வெளியாகி யுள்ளது.

# பிரான்ஸ் நபிகள் நாயகத்தின் கேலிச் சித்திரங்களை மாணவர்களுக்கு காட்டிய விரிவுரையாளர் படுகொலை!





பிரான்ஸில் நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரங்களை மாணவர்களுக்குக் காட்டிய விரிவுரையாளர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

Yvelines மாவட்டத்தின் Conflans-Saint-Honorine கல்லூரிக்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

விசாரணையில், சார்லி ஹெப்டோ தாக்குதல் தொடர்பாக 47 வயதுடைய விரிவுரையாளர் பாடம் எடுத்ததாகவும், சார்லி ஹெப்டோ பத்திரிகையில் வெளியான நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரத்தைக் காண்பித்ததாலும் குறித்த 18 வயது இளைஞன் ஆத்திரம் அடைந்து இந்த கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டதாக தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து இந்த இளைஞனை கைது செய்ய முயன்ற போது, அவர் தப்பியோடியமையால், அவரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர். இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாரிஸ் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் மேற்கொண்டுவரு கின்றனர்.

இதன்போது, அந்த இளைஞனிடமிருந்து சிறிய கைத்துப்பாக்கியும், ஒரு கூரான கத்தியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

தாக்குதல் நடத்திய நபர், செசென் பகுதியைச் சேர்ந்த 18 வயது நிரம்பிய இளைஞர் என்று தகவல் வெளியாகி உள்ளது. இவர் மொஸ்கோவில் பிறந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்குக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், இதுவொரு கோழைத்தனமான தாக்குதல் என குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

'எங்களுடைய குடிமகன் ஒருவரை இழந்துவிட்டோம். ஏனென்றால் அவர் மாணவர்களுக்குக் கருத்து சுதந்திரத்தையும், நம்பகத்தன்மையையும் கற்றுக்கொடுத்தமைக்காக! ஆசிரியர்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்பு வழங்கும்' என கூறினார்.

2015 ஆம் ஆண்டு முகமது நபிகள் குறித்ததொடர்பாக கேலிச் சித்திரங்களை வெளியிட்டமைக்காக பாரிஸில் அமைந்துள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை நிறுவனம் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்டெஃபேன் கார்போனியர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். அதன்பின்னர் நடந்த இரண்டாவது பயங்கரவாத தாக்கு தல் இதுவாகும்.

## அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு 80 லட்சம் கடந்தது!

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் (கோவிட் – 19) பெருந்தொற்றால், பாதிக் கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 80 லட்சத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி, அமெரிக்காவில் இதுவரை 82 லட்சத்து 88 ஆயிரத்து 278 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால், அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த நாடாக விளங்கும் அமெரிக்காவில், இதுவரை மொத்தமாக, இரண்டு லட்சத்து 23 ஆயிரத்து 644 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 71ஆயிரத்து 687 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 928 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை 26 லட்சத்து 69 ஆயிரத்து 233 பேர் வைரஸ் தொற்றுக்காக, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், 15 ஆயிரத்து 318 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

அத்துடன் இதுவரை மொத்தமாக, 53 லட்சத்து 95 ஆயிரத்து 401 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## அவசரகாலநிலைக்கு மத்தியில் தாய்லாந்தில் பெரும் பேரணி!

### பொலிஸார் கண்ணீர் புகை தாக்கு



தாய்லாந்தில் அரசாங்கத்துக்கு எதிராகவும் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டமையைக் கண்டித்தும் பல்லாயிரக் கணக்கானவர்கள் தலைநகர் பாங்கொக்கில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பதும்வான் நகரில் போராட்டக்காரர்களின் பேரணி சென்றபோது கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்ட நிலையில் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து, போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியமையுடன் நீர்த் தாரைப் பிரயோகங்களும் மேற்கொண்டனர்.

எனினும், கடும் மழைக்கு மத்தியிலும் பேரணி நடைபெற்றுவருவதுடன் இரவுடன் பேரணியை முடிவுக்குக்கொண்டுவரும் அறிவிப்பு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் பிரதமர் பதவி விலகவேண்டும், புதிய அரசியல் சாசன சட்டம் இயற்றப்பட வேண்டும், முடியாட்சியில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும், மன்னரின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் இயக்கம் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில் தொடர் போராட்டங்களைக் கட்டுப்படுத்த கடந்த வியாழக்கிழமை காலை அவசரகால நிலையை பிரதமர் அறிவித்தார்.

அத்துடன், போராட்டங்களை நிறுத்துமாறு அவர் வலியுறுத்திய நிலையில், தற்போது அவசரகால நிலைக்கு எதிராகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, பிரதமர் பதவி விலகும்வரை போராட்டங்கள் நிறுத்தப்படா என போராட்டக்காரர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமர் பிரயுத் சான் – ஓச்சா தான் இராஜினாமா செய்ய மாட்டேன் என அறிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அதிகாரங்களைப் பயன்படுத்த அரசாங்கம் தயங்காது எனவும் போராட்டக்காரர்களுக்கு அவர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து கதிரியக்க நீரை கடலுக்குள் விட முடிவு!




பேரழிவுகரமான புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து கதிரியக்க நீரை கடலுக்குள் விடுவிக்க ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த மாதத்திற்குள் இதுதொடர்பாக முறையான அறிவிப்பு வெளியாகும் என ஜப்பானிய ஊடகங்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) செய்தி வெளியிட்டுள்ளன.

டோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவனம் 2011 மார்ச்சில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியால் புகுஷிமா டாயிச்சி அணுமின் நிலையம் முடங்கியதில் இருந்து ஒரு மில்லியன் தொன்களுக்கும் அதிகமான அசுத்தமான தண்ணீரை சேகரித்துள்ளது.

இந்நிலையில், இதுதொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என ஜப்பானிய தொழில்துறை அமைச்சர் ஹிரோஷி கஜியாமா தெரிவித்துள்ளதுடன் விரைவில் கதிரியக் நீரை அகற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், புகுஷிமா டாயிச்சி ஆலையை நிறுத்துவது என்பது புகுஷிமா அணுசக்தி பேரழிவிலிருந்து மீள்வதற்கான முக்கிய முன்மாதிரியாகும் எனவும் அதன் செயற்பாட்டை நிறுத்துவதில் ஏற்படும் தாமதம் தொடர்பில் விரைவில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் அவர் ஊடக மாநாட்டில் கூறியுள்ளார்.

புகுஷிமா அணுமின் நிலையத்தில் சேகரிக்கப்பட்டுள்ள அசுத்தமான நீரை கடலுக்குள் விடுவதில் சில எதிர்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

முக்கியமாக, ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த வடக்கு கோடையில் டோக்கியோவில் நடைபெறவுள்ளது. சில நிகழ்வுகள் ஆலையிலிருந்து 60 கிலோமீற்றர் தொலைவிலேயே நடக்கின்றன. இதனால் அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கவலை எழுந்துள்ளது.

மேலும், கழிவு நீரை கடலில் கலப்பது ஜப்பானிய மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அண்டை நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்ற கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கடந்த வாரம், ஜப்பானிய மீன்பிடித்துறை பிரதிநிதிகள் கதிரியக்க நீரை கடலுக்குள் விட அனுமதிக்க வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், அணுசக்தி பேரழிவிற்குப் பின்னர் புகுஷிமா பிராந்தியத்தில் இருந்து கடல் உணவு இறக்குமதிக்கு தென்கொரியா விதித்த தடை தொடர்கிறது. இந்நிலையில், தென்கொரியா கதிரியக்க நீர் கையாள்கை தொடர்பாக ஜப்பானிடம் விளக்கம் கேட்டுள்ளது.

இந்த சூழலில், இவ்வாண்டு தொடக்கத்தில், அணுசக்தி ஆலையில் இருந்து கதிரியக்க நீரை வெளியேற்றுவது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு, அதை கடலில் விடுவிக்க பரிந்துரைத்தது.

இதையடுத்து, ஜப்பானின் தொழில்துறை அமைச்சகம் ஏப்ரல் முதல் மீன்வள பிரதிநிதிகள் உட்பட பல வேறு கட்சிகளிடமிருந்து கருத்துக்களைக் கேட்டு வருகிறது. இந்நிலையில் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அடுத்தக்கட்ட நடவடிக்கை தொடர்பாக ஜப்பான் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

## பெண்ணின் நுரையீரலில் சிக்கியது கொரோனா பரிசோதனைக் குழாய்!

கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனையின் போது பரிசோதனை குழாய், குரல்வளை ஊடாக பெண்ணொருவரின் நுரையீரலில் சிக்கிய சம்பவமொன்று பிரித்தானியாவிலுள்ள லெய்ஸ்டர் வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

அந்த வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தின்பேரில் சேர்க்கப்பட்டிருந்த பெண்ணுக்கு, தாதியொருவர் பரிசோதனை மேற்கொண்டிருந்த வேளையில் சோதனை குழாய் தவறுதலாக உட்செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, அந்த சோதனை குழாய், பெண்ணின் குரல்வளை ஊடாக அவரது வலது நுரையீரலில் சிக்கியுள்ளதாக மருத்துவ பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அந்தப் பெண்ணுக்கு நரம்பியல் அறுவை சிகிச்சைக்குப் பிறகு சோதனை குழாயை அகற்றுவதற்கான மேலதிக சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நோயாளிகளை எவ்வாறு சோதிப்பது என்பது தொடர்பான தெளிவான வழிகாட்டுதல் தாதியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு அவசியமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

